ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

## திவ்ய க்ரந்தங்களைக் காத்திட, திருமாலடியார்களை அழைக்கிறோம் !!!

ஆழ்வார்கள்வாழி அருளிச்செயல்வாழி
தாழ்வாதுமில் குரவர்தாம்வாழி–ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறைதன்னுடனே சேர்ந்து.

பேராளன் பேரோதும் பெரியீர் !

திருமகள்கேள்வனது இயல்வான கருணையினாலும், அவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் வாயிலாக அவதரித்த அருளிச்செயல்களாலும், அவர்களது திருவடிகளில் ஆராத காதல் கொண்ட நமது ஆசார்யர்களது அருமையான விளக்கவுரைகளாலும் ஒப்புயர்வற்ற நமது ஸ்ரீவைஷ்ணவமதத்தின் வாழ்வியல் நன்னெறிகள் வாழையடி வாழையாக இன்றுவரை நமக்கு வழிகாட்டி வந்துள்ளன.

நமக்கு இப்பெறும்பேற்றை நல்கிய எம்பெருமானுக்கும் அவனது இன்னருளை நமக்கு வெளியிட்டருளிய ஆழ்வார்களுக்கும் அவர்களது அருளிச்செயலை நாம் உணர்ந்து இனிதே அநுபவிப்பதற்குக் காரணமான ஆசார்யர்களுக்கும் நாம் காட்டவேண்டிய நன்றிக் கடன் ஒன்று உண்டு! நமக்குக் கிடைத்த இப்பெரும் பேறு நமது தலைமுறைகளுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டியதே அது!

ஆம்! நமது முன்னோர்கள் நமக்குத் தந்தருளிய விலைமதிக்கவியலாத ஞானச்செல்வத்தைப் பின்புள்ளாரும் பெற்று உய்வதற்கு இன்றுள்ள வழிமுறைகள் சிலவற்றில், அவற்றைத் தரம்மிக்க நூல்களாக அச்சிட்டு வெளியிடுதல் மிக அவசியமானதொன்று.

சீர்மைமிக்க இப்பெரும்பணியினை இடையூறின்றி இடைவிடாது நிறைவேற்றுவதற்காக 'க்ரந்த பரிபாலந ட்ரஸ்ட்' என்ற அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டு, அதன் வாயிலாக 'ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்' என்ற மாத இதழ் ஸர்வதாரி ஷு சித்திரை (ஏப்ரல் 2008) முதல் வெளியிடப்படுகி றது.

இதுவரை பதிப்பிக்காத ஸ்ரீவைஷ்ணவக்ரந்தங்களைப் பதிப்பித்து, அவற்றை எளிய தமிழுரையுடன் வெளியிடுதல், வெகுகாலமாகப் புதிய பதிப்புக்கள் பெறாத திவ்யக்ரந்தங்களை மறுபதிப்புச்செய்தல், மேலும் இவற்றை ஆசையுடையோர்க்கெல்லாம் என்றும் எந்நேரத்திலும் கிடைக்கும்படி இணையதளத்தில் கொண்டுவருதல், நமது ஸம்ப்ரதாயத்தை உலகம் முழுவதும் பரவச்செய்தல், ஸ்ரீவைஷ்ணவமதத்திற்கு எவராலும் நலிவுவராதபடி பாதுகாத்தல் ஆகியவை இப்பத்திரிகையின் குறிக்கோள்கள்.

ஊர்கூடித்தேர் இழுப்பதுபோல் இம்மாபெரும் பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்யத்தில் அனைவரும் கலந்துகொண்டு தங்களால் இயன்ற நிதியுதவியளித்து ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவ ப்ரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகைக்கு தங்கள் ஆதரவுக்கரம் தரும் வகையில் ரூ.2000/ஐ ஆயுள்சந்தா(12 வருடச்சந்தா)வாகவோ, ரூ.240/ ஐ வருடச்சந்தாவாகவோ கொடுத்தும், மேலும் தங்களது மனமுவந்த நன்கொடைகளை அளித்தும் பகவத்பாகவதஆசார்ய க்ருபைக்குப் பாத்திரர்களாகவேணுமாய் வேண்டிக் கொள்கிறோம். நன்கொடை/ சந்தாவை 'க்ரந்தபரிபாலனட்ரஸ்ட்' என்ற பெயரில் 24/71, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி–17 போன்: 9994606427/9894212038 என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சுபமஸ்து,

இங்ஙனம்
அம்மாள் ஸௌம்யநாராயணாசார்யர்,
மேலத்திருமாளிகை, திருவெள்ளறை.